திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: தலைவரவர்களே, அரசாங்கம் ஒரு பக்கத்திலே குழந்தைகள் பிறப்பதை தடை செய்யவேண்டுமென்பதற்காக நிறைய பணத்தைச் செலவு செய்து பிரசாரம் செய்து வருகின்றது. கல்யாணம் கொஞ்சம் லேட்டாகச் செய்தால் குழந்தைகள் பிறப்பதையும் கொஞ்சம் தடை செய்ய முடியும். அரசாங்கமே கல்யாணம் செய்வதற்கு உதவி செய்கிறேன் என்று சொல்லி ரூ. 2,000 பணத்தை இப்போது ஒதுக்கியிருக்கிறார்கள். எனக்குத் தெரிந்த வரையில் கல்யாணம் ஆனவர்கள் கூட பணம் வாங்கிக்கொண்டு வருகிறார்கள். இப்போது கல்யாணம் செய்வதற்கு கோவில் பணத்தையும் எடுத்துச் செலவிடலாமா? ஒரு பக்கத்தில் மக்கள் தொகையைக் குறைப்பதற்குப் பிரசாரம், மற்றொரு வகையில் அரசாங்கமே விரைவாகக் கல்யாணம் நடத்தி வைப்பதற்கு வசதி செய்து கொடுப்பது, இது விஷயத்தில் அரசாங்கம் என்ன கொள்கை அனுஷ்டித்து வருகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கூழுக்கும் ஆசை. மீசைக்கும் ஆசை என்றால், கூழ் குடிக்கும்போது மீசையை ஒதுக்கிக்கொண்டுதான் கூழ் குடிக்க வேண்டும். (சிரிப்பு)

ஸ்ரீவில்லிபுத்தூர் கோயில்

***295. வினா—திரு. கா. காளிமுத்து:** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

ஸ்ரீவில்லிபுத்தூர் பெருமாள் கோயில் கோபுரத் திருப்பணி செய்ய அரசு திட்டமிட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: ஆம்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]